பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை (04 - 01 - 2000) VALAMPURI ஒலி: 16

## ★ இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கான

# சமாதான பேச்சு குறித்து ஆராய நோர்வே அமைச்சர் வருகிறார்

## அரச, எதிர்த் தரப்பினரை சந்திப்பார்

(ஒஸ்லோ)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் நீண்ட காலமாக ஈடுபட்டுவரும் நோர்வே அரசின் வெளிநாட்டு அமைச்சர் நட்வொலிபீக் இம்மாதம் 15 ஆம் திகதி இலங்கை வரவிருப்பதாகவும் 16 ஆம் திகதி வரை இலங்கையில் அவர் தங்கி இருப்பாரெனவும் ராய்டர் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் இனப்பிரச்சினையை சமாதானத் தீர்வுக்குக் கொண்டுவருவது குறித்து சமாதானப் பேச்சு வார்த்தை தொடர்பாக அரசுடன் கலந்தாலோசிப்பதற்கு நோர்வே வெளிநாட்டமைச்சர் நட்வொலிபீக் தமிழர் திருநாள் தைப்பொங்கல் தினத்தன்று (15-ம்திகதி) இலங்கைவரவுள்ளார்.

இலங்கைவரவுள்ள வெளிநாட்டமைச்சர் இன்று நோர்வேயிலிருந்து புறப்பட்டு போலந்து, தாய்லாந்து, இந்தியா, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தபின்னரே இலங்கைவரவுள்ளார்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின்பின் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளிடையேயும், மக்கள் மத்தியிலும் நிலவும் உண்மை நிலையை பார்த்து அதற்கேற்றவகையில் சமாதானசூழ்நிலமைகளை அறிந்துகொள்வதற்குஉதவும் என வெளிநாட்டமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினை தொடர்பாக மூன்றாவது நாடு ஒன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக சிகிச்சைக்கு ஜனாதிபதி அமெரிக்கா செல்லவிருக்கிறார்

கொழும்பு குண்டுவெடிப்பு சம்பவத்தில் ஒரு கண்பார்வையை இழந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மேலதிகசிகிச்சை பெறும் பொருட்டு மீண்டும் அமெரிக்கா செல்லவிருக்கிறார்.

வைத்தியர்களின் ஆலோசனைக்கேற்பவே ஜனாதிபதி இன்னும் இரண்டொருதினங்களில் அமெரிக்கா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வடக்கு-கிழக்கு மாகாணசபை

## தேர்தல் நடாத்தி நிர்வாகம் மக்கள் கையில் ஒப்படைக்கப்படும்

### அமைச்சர் அலவி மௌலானா

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் வடக்குக் கிழக்கு மாகணங்களில் சுமுகமான சூழ்நிலை நிலவுவதையே காட்டுகிறது. என உள்ளூராட்சிமாகாண சபைகள் அமைச்சர் எஸ். அலவி மௌலானா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாண மக்கள் பெரும் தொகையில் கலந்துகொண்டதானது, அங்கு நிலவுகின்ற சிறந்த சூழ்நிலையையே எடுத்துக் காட்டுகின்றது.

எனவே இந்த சூழ்நிலையை

[6 ம் பக்கம் பார்க்க]

### புங்குடுதீவு படுகொலைச் சம்பவம்

## ஏழு கடற்படைவீரர் விசாரணை கைது செய்யப்போதிய ஆதாரம் இல்லை

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு இளம் அந்தணப் பெண் படுகொலை சம்பந்தமாக ஏழு கடற்படையினரை யாழ். பொலீஸார் விசாரணைக்குட்படுத்தி அவர்களிடம் இருந்து வாக்கு மூலம் பெற்றுக்கொண்டதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி விசாரணைச் சம்பவம் நடைபெற்றஇடத்துக்கு அருகாமையில் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரிடம் இருந்து வாக்குமூலம் பெறப்பட்டு சம்வத்தில் ஈடுபட்டவர்களை கைதுசெய்வதற்கானபோதியளவு ஆதாரம் கிடைக்கவில்லை என்றும் இப்பகுதியில் 6 கடற்படை முகாம்கள் இருப்பதாகவும் இதில் எந்த முகாமைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டவர்கள் என்று தெரிந்து கொள்ள முடியாதிருப்பதாகவும்பொலீஸார் மேலும் தெவித்தனர்.

### திருமலை மாவட்டம்

## மூதூரில் மோதல் இருவர் பலி

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் மூதூர்ப் பகுதியிலுள்ள மலைமும்பை இராணுவ காவலரணில் இருந்து வீதித் தடைகளை அகற்றவந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்று விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் பெயர் விபரம் வருமாறு

★ லெப். வேணி சண்முகராசா நாகேஸ்வரி திருமலை.

★ கப்டன் வீரப்பன் புவனேந்திரன் யேசுதாசன் கொழும்பு.

இதேவேளை ஓயாத அலைகளின் போது வீரவேங்கை மஞ்சரி, தம்பிஐயா, இராஜேஸ்வரி, மாங்குளம்.

## யாழ்ப்பாணத்தில் நேற்று இளம் பெண் உட்பட ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் குடா நாட்டில் இளம் பெண் ஒருவர் உட்பட ஐவர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களது கைது தொடர்பான பற்றுச்சீட்டுகள் இவர்களது உறவினர்களிடம் வழங்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களது விபரம் வருமாறு.

பத்மநாதன் - பத்மாசினி (வயது 24) கச்சேரியடி.

ராசய்யா – உதயன் (வயது 22)கச்சேரியடி.

வசந்தராசா - சுதாகரன் (வயது 22) கொழும்புத்துறை

அன்னரத்தினம் ஸ்ரான்லி [வயது 26] யாழ் மாநகரசபை ஊழியர்.

செல்வராசா -அருட்செல்வம் பண்டத்தரிப்பு.

## 6 இளைஞர்களும் படையினரால் விடுதலை

(ஆனைப்பந்தி)

கடந்த இரு கிழமைகளில் உரும்பிராய் செல்வபுரத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு ஊரெழு முகாமில் தடுத்து [illegible]க்கப்பட்ட 6 இளை[illegible] படையினரால் விடு[illegible] செய்யப்பட்டுள்ளனர் என யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகள் தெரிவித்தனர்.

### திருமலையிலிருந்து

## 1000 பயணிகளுடன் கப்பல் நாளை காங்கேசன்துறை வரும்!

(திருமலை)

திருமலையில் இருந்து 1000 பயணிகளுடன் ''லங்கா முடித்த'' கப்பல் நாளை புதன் கிழமை காங்கேசன் துறைக்கு வரவுள்ளதாக திருமலை பிரதேசச்செயலர் திரு. வேலும்மயிலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஆயிரம் பயணிகளுள் 300 பேர்கள் காங்கேசன் துறை வருவதற்காக வவுனியா அகதி முகாமில் தங்கி இருந்தவர்களாகும்.

இதேவேளை 1148 பயணிகளுடன் காங்கேசன் துறையிலிருந்து நேற்று புறப்பட்ட 'லங்கா முடித்த' திருமலை வந்து சேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது.

### தேசிய அரசாங்கம் அமைப்பதில்

## ஜனாதிபதியின் அழைப்பிற்கு ஐ. தே. கட்சியின் ஆதரவு இல்லை!

(கொழும்பு)

தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீவிரமாக இருந்திருந்தால் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடனோ அல்லது என்னுடனோ இது சம்பந்தமாகப் பேசியிருக்க வேண்டும் என மாத்தளை மாவட்ட ஐ. தே. க. எம். பி.யும் முன்னால் நிதியமைச்சருமான றொனிடிமெல் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதியின் உரை தொடர்பாக வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் தெரிவிக்கப்பட்ட அறிக்கைகளை வைத்துக்கொண்டு இந்த விடயம் தொடர்பாக ஐ. தே. க. எந்தச் செயற்பாட்டினையும் முன்னெடுக்க

(6 ம் பக்கம் பார்க்க)

## (இராசி பலன்)

04.01.2000 செவ்வாய்க் கிழமை
(தமிழுக்கு மார்கழி 20)

திரயோதசி இரவு 8.44 வரை, சேட்டை சித்தமிர்த யோகம், இராகு காலம் மாலை 4.01 முதல் 5.31 வரை, சுபநேரம் காலை 11.31 முதல் 1.01 வரை.

மேடம்- வேலைக் கஸ்டம், அமைதியின்மை, பணமுடை.

இடபம்- தியாக சிந்தை, இனசன நன்மை, பயணத்தடை.

மிதுனம்- புதிய முயற்சி, தொழில் சிறப்பு, அவசரப் போக்கு.

கடகம்- சஞ்சலப்படல், பிதா கவலை, மனமுறிவு.

சிங்கம்–இயலாமை, பெண்கள் வெறுப்பு, துயரம்.

கன்னி- கல்வியால் பாராட்டு, அதிஷ்டம், உல்லாசம்.

துலாம்-வேண்டாத தொல்லை, வைத்தியச் செலவு, கடினவாக்கு.

விருச்சிகம்–தொழில் முதலீடு, கடன் வரவு, பொதுப்பணி.

தனுசு- தவறை உணர்தல், பதவி மாற்றம், அமைதி.

மகரம்– சயன சுகம், உறவினர் பாசம், தானதர்மம்.

கும்பம்-குழந்தை மனம், புதியவர் நட்பு, ஆசாரம்.

மீனம்- பங்காளர் வெறுப்பு, பெண் நேயம், அகால உயர்வு.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

நல்லூர் பிரதேச சபையில்

## காலைமுதல் மாலைவரை நூலக சேவை இடம்பெறும்

### தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பொது நூலகங்கள் இம்மாதம் முதல் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை செயற்படுவதாக நல்லூர் பிரதேச சபை தலைவர் மணிபல்லவராஜன் தெரிவித்தார்.

மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மையை கருத்தில் கொண்டு இச் சேவை மீளாய்வு செய்யப்பட்டதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

தொலைக்காட்சிப் பெட்டிகள், போன்றன வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்,

## குடும்பத் தகராறில் இளம் குடும்பஸ்தர் தற்கொலை

[சாவகச்சேரி]

குடும்பத் தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த குமாரசாமி சந்திரகுமார் (வயது 23) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே தற்கொலை செய்து கொண்டவராவர்.

குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீப்பற்ற வைத்துத் தற்கொலை செய்ய முயற்சித்தார்.

உடனடியாக உறவினர்களால் தீயணைக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போது இவர் மரணமானார். (செ-21)

## விரைவில் மலசல கூடம்

[புலோலி]

பருத்தித்துறை நகர பஸ் நிலையத்தில் பொது மலசல கூடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. வி. விஜயரட்ணம் தெரிவித்தார்.

[க-52]

## மாகாணசபையின்கீழ் கடமை புரிந்தோர் இனிமேல் மத்திய அரசில் பணிபுரிவர்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண சபையின் கீழ் கடமையாற்றிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரும் இம்மாதம் தொடக்கம் மத்திய அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படஉள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டதுறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அமைச்சு தெரிவிக்கையில் மாகாண சபை முறை அமுலுக்கு வந்த பின்னர் பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய உத்தியோகத்தரில் ஒரு பகுதியினர் மத்திய அரசின் நிருவாகத்தின் கீழும், ஒரு பகுதியினர் மாகாணசபைகளின் நிருவாகத்தின் கீழும் கடமையாற்றி வந்தனர்.

இவ்வாறு இரண்டு நிர்வாகங்களின் கீழும் கடமையாற்றிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலர்கள் கணக்காளர்கள், உதவிதிட்டமிடல் உத்தியோகத்தர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள், எழுது வினைஞர்கள், சிற்றூழியர்கள் ஆகிய உத்தியோகத்தர்கள் அடங்குவர்.

இந்த உத்தியோகத்தர்கள் இரண்டு நிருவாகங்களின் கீழ் கடமையாற்றுயதனால் நிதி ஒதுக்கீடு சம்பளக் கொடுப்பனவு உட்பட சகல விடயங்களிலும், சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது.

எனவே இந்த சிக்கலை பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனால் பிரதேச செயலங்களில் கடமையாற்றும் மேற்படி உத்தியோகத்தர்கள் அனைவரும் புத்தாயிரம் ஆண்டு தொடக்கம் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர் என்றும்—

வெளிக்கள உத்தியோகத்தர்கள் மாத்திரம் மாகாண சபை நிருவாகத்தின் கீழ் தொடர்ந்தும் இணைக்கப்பட்டிருப்பர்.

(க-5)

## கிழக்கு மாகாணத்தில் பஸ் டிப்போக்களில் 200 க்கும் மேல் வெற்றிடங்கள் உண்டு

### பணிப்பாளர் தகவல்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்திலுள்ள நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி டிப்போக்களில் 200 சாரதி, நடத்துனருக்கான வெற்றிடங்கள் உள்ளதாக இக் கம்பனியின் பணிப்பாளர் கே. சந்திரசேகரம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்களிலுள்ள 13 டிப்போக்களிலும் இந்தவெற்றிடங்கள் உள்ளன.

225 பஸ்கள் இந்த டிப்போக்களிலிருந்து தினமும் சேவையிலீடுபடுகின்றன. 25க்கும் கூடுதலான பஸ்கள் ஓடமுடியாத அளவிற்கு வெறுமனே நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஓட முடியாத பஸ்களைத் திருத்த மத்திய போக்குவரத்துச் சபை அல்லது போக்குவரத்து அமைச்சு உதிரிப் பாகங்களைத் தரவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இவ் வருடம் மட்டும்

## சுகாதார அபிவிருத்திக்கு மட்டும் 80 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

### அமைச்சர் நிமால் ஸ்ரீ பாலடி சில்வா

(கொழும்பு)

நாட்டின் சுகாதார அபிவிருத்திக்கென இந்த வருடம் 80 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் நிமால் ஸ்ரீபாலடி சில்வா தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்: சென்ற வருடம்ஒதுக்கப்பட்ட தொகையை விட இது 40 சதவீதம் அதிகமாகும். இந்தநிதி ஒதுக்கீட்டின் மூலம் மத்திய அரசாங்கத்தின் கீழ் பநம்பல வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளதாயும் தகவல் வெளியிட்டுள்ள அவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வைத்திய சாலை வீதம் அபிவிருத்திசெய்யப்படும் என்றும் இவ் வைத்திய சாலைகளுக்கு மேலும்பல வைத்திய நிபுணர்கள், தாதிமார்போன்றோர் புதிநாக நியமிக்கப்படுவதுடன் நவீனவைத்திய உபகரண வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு

## வெளிநாட்டு வேலை வாய்ப்பு வருமானமாக ரூ.50 மில்லியன்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளிற்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்கின்றவர்களினால் கிடைக்கும் வருமானம் 50 மில்லியன் ரூபாவாகும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக தலைவர் ஜெயந்தவியாகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; 1999 ஆம் ஆண்டின் முதல் 11 மாதத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலம் கிடைத்த தொகையே இதுவாகும்,

மேலும் இது பற்றித் தெரிவித்ததாவது இந்தப் 11 மாத காலத்தினுள் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்திற்கும் அதிகமான இலங்கையர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## வரவு செலவுத் திட்டச் செய்தி

அன்பிற்கினிய மக்களே!

1998-ம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் வலி கிழக்கு கிரதேசத்தின் தலைமைப் பொறுப்பினை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய எமக்கு மக்கள் அளித்தார்கள். இப்பொறுப்பின் ஊடாக ஆண்டு தோறும் எமக்கு கிடைக்கின்ற வருமானங்களைக் கொண்டு, இப்பகுதி மக்களுக்கு ஆற்ற வேண்டிய செயல் திட்டங்களை வகுத்து அதனூடாக வருடந்தோறும் அபிவிருத்திகளை மேற் கொண்டு வருகின்றோம். எமது வருமானங்களைக் கொண்டு செயற்படுத்தும் செயல் திட்டங்களே வரவு செலவுத்திட்டமாக முன்வைக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் எமது சபையைப் பொறுப்பேற்றதன் பின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தினைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் 2000ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் எமது பிரதேச மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளையும். செயற்திட்டங்களையும் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், அச்சுவேலி ஆகிய இடங்களில் ஆயுள்வேத வைத்திய சாலைகள் நிவறுப்பட்டு, மக்களுக்கு வைத்திய சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் எமது பிரதேசத்தில் வசதிகள் அற்ற வாதரவத்தை கிராம மக்களின் நன்மைகருதி புத்தூரில் ஆயுள்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டுள்ளது. இதேபோல் மிகவும் பின்தங்கிய மக்கள் வாழும் வேம்பிராய் பகுதியிலும் ஆயள்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதேச சபை எல்லைக்குள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி இல்லாத காரணத்தால், மக்கள் தமது நாளாந்த வங்கி அலுவல்களுக்கு யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி ஆகிய இடங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. இதன் காரணமாக எமது அச்சுவேலி சந்தைக் கடையின் மேல்மாடிக் கட்டிடத்தில் மக்கள் வங்கிக் கிளை திறப்பதற்கு, சபை நிதியிலிருந்து கட்டிடத்தைப் பூர்த்தி செய்து வங்கியை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுளது.

உரும்பிராய் சந்தியில் பல காலமாக இயங்கிய சந்தையை மீளப்புனரமைப்பு செய்து, சந்தையை திறந்து உரும்பிராய் பட்டினத்தை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐந்து பொது நூல் நிலையங்களுக்கும் ரூபா 500,000க்கு மேல் நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இவ்வரவு செலவுத்திட்டத்தில் வறிய சிறார்களுக்கு போஷாக்கு உணவு வழங்குவதற்கும், வறிய மாணவர்களுக்கு கண்ணாடி வழங்குவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் வறிய சிறார்களின் கல்வி மேம்பாட்டை கருத்திற் கொண்டு மிகவும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பகுதியில் அமைந்துள்ள 10முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ரூபா 500 வீதம் வேதனம் வழங்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் எமது பிரதேசத்தில் விளையாட்டுக்களையும், கலைகளையும் ஊக்குவிப்பதற்காக ஏற்படும் செலவை ஈடுசெய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வீதிகளை புனரமைப்பு செய்வதற்கும் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் மக்கள் சபைக்குச் செலுத்த வேண்டிய ஆதனவரி நிலுவை, வியாபார வரி, வாடகை மற்றும் ஏனைய வரிகளையும் செலுத்தி ஒத்துழைப்பு வழங்கினால் மேலும் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்ற முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.

எமது சபையின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றிவரும் எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ டக்ளஸ். தேவானந்தா அவர்களுக்கும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருமான திரு. வி. கே. ஜெகன் அவர்களுக்கும் எமது சபை சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே 2000ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பயன்தரும் திட்டங்களும், சேவைகளும் அடங்கியுள்ளதால், இவற்றை செயற்படுத்துவதற்கு சபை நிதிகளில் மாத்திரமன்றி ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்கள் மூலமும் அரசநிதி மூலமும், மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் திட்டங்கள் நிறைவேற்றப்படுமென எதிர் பார்க்கின்றேன்.

செ, குகதாசன்,
செயலாளர்
வலி. கிழக்கு பிரதேசபை,

பூ, குணசிங்கம்,
ஜே. பி. யு. எம்,
தவிசாளர்

தலைமை அலுவலகம், நீர்வேலி.
03-01-2000

00044

## தரம் 7 கணிதம் (2000) பாடத்திட்டம்

| கரு | படிமுறை இலக்கம் | தலைப்பு | பாடவேளை |
|---|---|---|---|
| எண் | 01 | ஒற்றை எண்கள், இரட்டை எண்கள் | 04 |
| எண் | 02 | பில்லியன்கள் | 03 |
| எண் | 03 | காரணிகள் | 08 |
| கேத்திரகணிதம் | 04 | திண்மங்கள் | 05 |
| அளவீடு | 05 | ஏகபரிமாண அளவீடுகளைக் கணித்தல் | 05 |
| அட்சரகணிதம் | 06 | அட்சரகணிதக் கோணங்கள் | 08 |
| அளவீடு | 07 | நிறை | 06 |
| அளவீடு | 08 | நேரம் | 03 |
| எண் | 09 | பின்னம் 1 | 04 |
| எண் | 10 | தசமம் 1 | 04 |
| எண் | 11 | பின்னம் 11 | 06 |
| எண் | 12 | தசமம் 11 | 06 |
| கேத்திரகணிதம் | 13 | கோணங்கள் | 06 |
| எண் | 14 | திசைகொண்ட எண்கள் | 05 |
| கேத்திரகணிதம் | 15 | சமாந்தரக்கோடு | 04 |
| அட்சரகணிதம் | 16 | சுட்டிகள் | 04 |
| கேத்திரகணிதம் | 17 | தளநேர்கோடு | 06 |
| புள்ளிவிபரவியல் | 18 | தரவுகளைச் சேகரித்தல் வகை குறித்தல் | 13 |
| கேத்திரகணிதம் | 19 | வட்டம் | 05 |
| அளவீடு | 20 | ஏகபரிமாண அளவீடுகளை அளவிடுதல் | 05 |
| எண் | 21 | விகிதம், வீதம் | 09 |
| அட்சரகணிதம் | 22 | சமன்பாடு | 06 |
| அளவீடு | 23 | பரப்பளவு | 06 |
| அட்சரகணிதம் | 24 | வரைபு | 06 |
| அளவீடு | 25 | திரவ அளவீடு | 04 |
| அளவீடு | 26 | கனவளவு | 03 |
| கேத்திரகணிதம் | 27 | தெறிப்புச் சமச்சீர் | 06 |
| அட்சரகணிதம் | 28 | சமனிலிகள் | 04 |
| புள்ளிவிபரவியல் | 29 | தரவுவகைக் குறித்தல் | 05 |
| நிகழ்தகவு | 30 | தொடைகள் | 04 |
| நிகழ்தகவு | 31 | நிகழ்தகவு | 06 |
| கேத்திரகணிதம் | 32 | தெசலாக்கம் | 05 |
| அளவீடு | 33 | அளவுத்திட்டத்திற்கு வரைதல் | 05 |

## தரம் 7 கணிதம் [2000] பாடத்திட்டம்

### உள்ளடக்கம்

01. ஒற்றை எண்கள், இரட்டை எண்களில் கணிதச் செய்கைகள் சக—X

02. சர்வதேச முறையில் பில்லியன் வரையான எண்களை வாசித்தல், எழுதுதல்.

03. 1000 இலும் குறைவான எண்களின் காரணிகள்' மடங்குகள் 3, 4, 5 ஆல் வகுபடுதன்மை முதன்மை எண்கள் (100 க்கு உட்பட்ட) எண்ணொன்றை முதன்மைக் காரணிகளின் பெருக்கமாகத் தரல்.
பொ. சி. பெ., பொ. ம. சி.
$360 = 2^3\ 3^2\ 5$

04. சதுரமுகிகள், கனவுருக்களின் மாதிரிகளை அமைத்தல். நான்முகி, சதுரக் கூம்பகம், முக்கோண அரியம் என்பவற்றின் மாதிரிகளை அமைத்தல்., விளிம்புகள், உச்சிகள், முகங்கள் என்பவற்றை இனம்காணல்.

05. கூட்டல், கழித்தல், இரு அலகுகளைக் கொண்ட ஏகபரிமாண அளவீடு ஒன்றை முழு எண்ணால் பெருக்கல், வகுத்தல், கிலோமீற்றர், மீற்றர், சென்ரிமீற்றர், மில்லிமீற்றர் ஆகிய அலகுகள் கொண்ட கணியங்களில் கொண்டு செல்லல் உடனான கூட்டல், கழித்தல் (பெருக்கல் இரண்டு அலகுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். முழு எண்களாகவும் இருத்தல் வேண்டும்.)

06. கூட்டல்—பெருக்கல், பிரித்தல் ஆகியவற்றைப் பயன்படுத்தி எளிய அட்சர கணிதக் கோவைகளை அமைத்தல் (பின்னக் குணகங்கள் உட்பட) உறுப்பு, குணகம், ஒத்த உறுப்பு, ஒவ்வாத உறுப்பு என்பவற்றை இனம் காணல், ஒத்த உறுப்புகளின் கூட்டல், கழித்தல் $\{(x \times y, Pq)\}$ அட்சரகணிதங்கள் உட்பட.

07. மில்லி கிராம் அறிமுகம் கிலோகிராம்—கிராம் — மில்லி கிராம் மாற்றீடுசெய்தல், கிலோகிராம், கிராம், மில்லி கிராம் கூட்டல், கழித்தல், முழு எண்ணால் பெருக்கல் வகுத்தல். கிலோகிராம்→கிராம்→மில்லிகிராம்

08. நாடுகளுக்கு இடையேயுள்ள நேரவேறுபாடு, லீப்வருடம் பற்றி அறிதல் நாட்காட்டியுடன் வயது கணித்தல்.

09. முறைமையில் பின்னங்கள், கலப்பு எண்கள் ஆகியவற்றை இனம் காணல், முறைமையில்லாப் பின்னத்தை கலப்பு எண்ணாகவும், கலப்புஎண்ணை முறைமையில்லாப் பின்னமாகவும் மாற்றல் எண் கோட்டினைப் பாவித்து பின்னங்களை ஒப்பிடல்.

10. நான்கு தசம தானங்கள் வரை தசமங்களை அறிமுகம் செய்தல், நான்கு தசம தானங்கள் வரையுள்ள இரண்டு அல்லது மூன்று தசமங்களைக் கூட்டல். 1-1 தசம தானம் மூன்று வரையுள்ள எண்கள் கழித்தல், ஒரு தசம தானம் கொண்ட எண்களால் பெருக்கல்.

11. மடங்குகளற்ற பகுதியெண் கொண்ட பின்னங்களின் கூட்டல். கழித்தல் முழு எண்ணால் பின்னத்தினைப் பெருக்கல், வகுத்தல் பின்னம் ஒன்றின் நேர்மாறு முழு எண்ணைப் பின்னம் ஒன்றால் பெருக்குதல், பிரித்தல்.

12. பத்தின் வலுக்களால் தசமங்களைப் பெருக்கல், பிரித்தல் ($10^3$ வரை) மூன்று தசமங்களைக் கொண்ட தசமங்களை ஒரு தசமதானத்தால் பெருக்கல், பிரித்தல் சென்ரிமீற்றர், மில்லிமீற்றரில் பொருட்களின் அளவீடு பிரித்தல்.

# பெரும்பான்மை இனம் எப்பொழுதும் ஏனையவர்களை அடக்க முடியாது

### ம. மக்கள் முன்னணி செயலர் மு.சிவலிங்கம்

(கொழும்பு)

தேசிய ரீதியிலோ அல்லது சர்வதேச ரீதியிலோ பெரும்பான்மை இனம் என்ற மக்கள் தொகையை வைத்துக் கொண்டு எந்த ஒரு அரசாங்கமும் சிறு பான்மை இனங்களை இனி வரும் காலங்களில் ஒடுக்க முடியாது.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான மு.சிவலிங்கம் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்களின் விடுதலைப் போராட்டம் மகத்துவம் நிறைந்தது. இவர்களுக்கு தார்மீக ரீதியிலும் உலக ரீதியிலும் ஆதரவுகள் உண்டு என்பதை இனவாதம் பேசும் அரசுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புத்தாயிரம் ஆண்டினாவது நமது நாட்டில் சாந்தி சமாதானம் மலர வேண்டும் என நாங்கள் பிரார்த்திப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாளும் மக்கள் உயிர்பறிக்கப்பட்டு, அதனால் கேட்கின்ற அவல ஓசைகளை கேட்காமலிருக்கும் நிலை உருவாக வேண்டும் என்றும் மேலும் தனது புத்தாண்டுச் செய்தியில்குறிப்பிட்டுள்ளார். (அ-05)

## 50 ஆயிரம் நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க கோப்பாய் பிரிவில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலயத்தை புனரமைப்புச் செய்வதற்கு ஐம்பதாயிரம் ரூபா நிதி கொழும்பு தலைமையகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது,

இந்நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் பயிற்சி நிலையமாகச் செயற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-6)

## மட்டக்களப்பில் மருத்துவ மனைகளை மீளவும் இயக்குவதற்கு முயற்சி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10 வருடங்களாக இயங்காதிருந்த பல மருத்துவ மனைகளை மீளவும் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

வாகரை, கதிரவெளி, மாங்கேணி, நாவற்காடு, மகிழவெட்டுவான், துறை நீலாவணை ஆகிய கிராமங்களிலேயே இம் மருத்துவ மனைகள் இயங்க இருக்கின்றன.

இதேவேளை, சமீபத்தில் மட்டக்களப்பில் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நடமாடும் சேவையின் போது இப் பகுதி மருத்துவ மனைகளுக்கான உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்க பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. [க-09]

## கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

வடமராட்சிப் பகுதியில் இம்முறை கிறிஸ்மஸ் கொண்டாட்டம் இடம்பெற்றது இதன் ஆரம்ப நடவடிக்கையாக நெல்லியடி சந்தியில் வணிகர் கழகத்தால் யேசு பாலனின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப் பட்டது.

இக் கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்வான நத்தார் பாப்பாவின் நடனம் வடமராட்சியின் முக்கிய சந்திகளில் நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறையில்

## மோட்டார் சைக்கிள் விபத்தில் நால்வர் காயம்; ஆஸ்பத்திரியில் அனுமதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதான சாலையில் குஞ்சர் கடைச் சந்திக்கும் புறாப் பொறுக்கி ஆலடிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் கடந்த 31ந் திகதி மாலை 6.30 மணிக்கு எதிர் எதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் அதில் பயணம் செய்த நால்வரும் காயங்களுடன் மயக்கமுற்ற நிலையில் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இதில் மருதடி வீதி' கொடிகாமத்தைச் சேர்ந்த இராசேந்திரம் இராசகுலேந்திரம் (வயது 25) பலத்த காயம் அடைந்துள்ளார்,

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளன விபத்து நடந்த இடத்திலிருந்து ஒரு கையில் காயமடைந்த இராசகுலேந்திரம் என்பவருடைய அடையாள அட்டையும் சிறுதொகைப் பணமும் கண்டெடுக்கப்பட்டு அருகிலுள்ள வீட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது அத்துடன் மோட்டார்சைக்கிளும் அருகிலுள்ள வீட்டில் விடப் பட்டுள்ளது.

## முதலுதவி பயிற்றுநர் காலமானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவை சங்க கொழும்புத் தலைமையகத்தில் முதலுதவித் தேசிய இணைப்பாளரும் முதலுதவிப் பயிற்றுனருமான ஆர். டபிள்யூ, சோமசிறி கொழும்பில் காலமானார்.

இவர் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணியில் தன்னை நீண்ட காலமாக ஈடுபடுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நத்தார் சம்பவம்

[கொழும்பு]

நத்தார் தினத்தன்று கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் 539 பேர் காயமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நத்தார் தினத்தன்று குடிபோதை, மோட்டார் வாகன விபத்து என்பவற்றால் பாதிக்கப்பட்ட 539 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிசிச்சை பெற்றிருப்பதாக வைத்தியசாலை விபத்துப் பிரிவுப் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். இவர்களில் 310பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும், 229 பேர் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தார்'

## கடந்தஆண்டு உலக உதைபந்தாட்டத்தில் பிறேசில் அணி முதலிடம் வகிப்பு

[கொழும்பு]

கடந்த ஆண்டு முடிவடைந்த நிலையில் உலக அரங்கில் உதைபந்தாட்டத்தில் பிரேஸில் அணியே முதல் இடத்தை வகிப்பதாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மேற்படி சம்மேளனம் மேலும் தெரிவிக்கையில்,

பிரேஸில் அணியே கடந்த 7 மாதங்களாக முதலிடத்தில் இருக்கிறது. கடந்த வருடம் உலகக் கிண்ணப் போட்டியில் பிரான்ஸ் உலகக்கிண்ணத்தை கைப்பற்றினாலும் உலகத்தரத்தில் தற்போது 3ஆம் இடத்திலேயே உள்ளது. 2ஆம் இடத்தில் செக்குடியரசு உள்ளது,

ஆசியாவில் சவூதி அரேபியா 1ஆம் இடத்தில் இருந்தாலும் உலகத்தரத்தில் 28 வது இடத்தில் இருக்கிறது. இலங்கைஅணி ஆசியாவில் 27வது இடத்திலும், உலகத் தரத்தில் 144வது இடத்திலும் உள்ளது, [க-த-29]

## பாம்பு தீண்டியது

அண்மையில் இடம் பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் இருவரை பாம்பு தீண்டியது.

மிருசுவில் பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தில் வேலி அடைத்துக் கொண்டிருந்த அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை ஜெயராசா என்பவரும் சரசாலை பகுதியில் இடம்பெற்ற மற்றைய சம்பவத்தில் சாமி அறையில் இருந்தவேளை அதே இடத்தைச் சேர்ந்த வீரகத்தி கிருஸ்ணசாமி(வயது 43) என்பவருமே பாம்புக்கடிக்குஇலக்கானவர்கள் ஆவர்.

இவ்விருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். [வ-58]

## செயற்கை அவயவங்கள் பொருத்தியோருக்கு வட்டி இல்லாக் கடன் வழங்கப்படுகிறது

### யாழ்- ஜெய்ப்பூர் தலைவர் தகவல்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருந்தும் நிறுவனத்தினூடாக செயற்கை அங்க அவயங்களைப் பொருத்திக் கொண்டவர்களுக்கு சுய தொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் முகமாக வட்டியற்ற கடனாக 2500 ரூபா வழங்கப்பட்டு வருவதாக அந் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சுய தொழில் வாய்ப்பிற்காக வழங்கப்படும் இப்பணத்திற்கு அவர்கள் வட்டி செலுத்த வேண்டியதில்லை என்றும் மீளப் பணம் செலுத்தி முடிப்பதற்கேற்ப சுழற்சி முறையில் மீளவும் கடனாகப் பணம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புத்தாண்டுப் பலன் - 4

## தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதலாம் பாதம் வரையான நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் தங்கள் பெயரின் முதல் எழுத்தாக, யே, யோ, ப, பி, த, பு, ப, ட, பே, என்னும் எழுத்துக்களைக் கொண்டவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் ஒன்பதாவது ராசியாக திகழ்வது தனுசு ராசி. இந்தராசிக்கு அதிபதி குருபகவான், இந்த ராசிக்காரர்கள் உண்மையும், நேர்மையுமிக்கவர்கள், வெளிப்படையானவர்கள் பெரியோர்களுக்கு மட்டுமன்றி தம்மைவிட வயதில் சிறியவர்களுக்கும், கூட அஞ்சியே வாழ்பவர்கள். விரோதிகளை எப்போதும் வெல்லும் ஆர்வம் இவர்களிடமுண்டு, தம் வேலையிலும் பலத்திலும் கண்டிப்புடன் நடந்து கொள்வர், பிறரைக் கெடுக்கும் எண்ணம் சிறிதும் அற்றவர்கள், குடும்பத்தாரிடம் அதிக பற்றும் பாசமுமிக்கவர்கள் சிறுவயதில் இருக்கும் செல்வமும் வசதியும் பிற்காலத்தில் இல்லாதவர்கள். இவர்கள் பெண்கள் வகையில் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் பல தொல்லைகளைச் சந்திக்க வேண்டி வரும். உற்சாகமும் பேராசையுமிக்கவர். தந்தையின் பொருளை அற்பமாக நினைப்பவர், தனுசு ராசி உபயராசியாக இருப்பதால் தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப சுகம் கிடைப்பதில்லை. இந்த ராசியினருக்கு உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாகப் பேச இவர்களுக்குத் தெரியாது. பொறுமைசாலியான இவர்கள் எந்தக் காரியத்தையும் சரியாக திறமையுடன் செய்து முடிப்பார்கள். குடும்பத்தில் இவர்கள் செல்வாக்கு மிக்கவர்கள். இவர்களிடம் குடும்பத்தினர் அனைவரும் மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பார்கள். குடும்பத்தின் முழுப் பராமரிப்பும் தனுசு இராசியினரே இவர்களுக்கு மனைவி வழியால் செல்வம் வருவதில்லை. திருமணத்துக்கு முன்னரே தனுசு இராசிப் பெண்கள் காதல் கொண்டு தவறினாலும் குடும்பமான பின்னர் ஒழுக்கத்தில் தவறுவதில்லை. பெண்கள் சாப்பாட்டுப் பிரியர்களாக இருந்து சாப்பாட்டினால் நோய்களுக்குள்ளாவதுண்டு, நிர்வாகத் திறமைமிக்கவர்களாக இருப்பதால் பலபதவிகளை வகிக்கக்கூடியவர். ஆத்மீகத் துறையில் அதிக நாட்டம் கொண்டிருப்பர். சிறுநீரக கோளாறினாலும் நுரையீரல் தொடர்புடைய கோளாறினாலும் வாழ்வின் பிற்காலத்தில் அவதியுறுகின்றனர். மின்விசைத் தாக்கு, தீ போன்றவற்றால் இவர்களுக்கு விபத்து ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. இந்த ராசியினருக்கு 21, 30, 39, 48, 57 வயதுகளிலே யோகம் ஏற்படுவதுண்டு தனுசு ராசியின் அதிபதி குரு, வழிபடும் தெய்வம் விநாயகர், அதிஸ்ட நிறம் - பொன்நிறம், அதிஸ்ட ரத்தினம் புஷ்பராகம், அதிஸ்ட எண்கள் 6, 9, 3, அதிஸ்ட வாசல் வடகிழக்கு,

இந்த ராசியினருக்கு இவ்வாண்டு சனிபகவானும் வியாழ பகவானும் சத்துருஸ்தானமான ஆறாம் வீட்டில் சஞ்சாரம் செய்யவுள்ளனர். இராகு கேது மாற்றமும் சாதகமான பலன்களைத் தர வாய்ப்பில்லை. வியாழன் தனது வீட்டிலிருந்து 10, 12, 2ம் வீடுகளைப் பார்வை செய்வதும், துயர் பலவரினும் சமாளித்துக் கொள்ளும் பக்குவத்தைத் தரும், வருட முற்பகுதியில் கிடைக்கும் யோகங்கள் படிப்படியாக குறையத் தொடங்கும், தொழில்துறைகளில் அலைச்சலும், முதலீடுகள் குறையத் தொடங்கும், பணப்புழக்கம் மந்தநிலையடையும், அரச ஊழியர்கள் மறைமுகமான உபத்திரங்களைத் சந்திக்க வேண்டி வரும். இடமாற்றங்கள் திருப்தி தராது, குடும்பத்தில் கவலைகள் அதிகரிக்கும். குடும்ப உறவினர்களால் பணச்செலவுண்டு, திருமணங்கள் தாமதமாகும். பெற்றோர் தம் அபிப்பிராயங்களை ஏற்படுத்துவர். தொழிலற்றவர் மேலும் சஞ்சலமடைவர். மாணவர்கள்கல்வியில் மாற்றங்களை ஏற்படுத்தி சிரமங்களை எதிர் நோக்குவர், பரீட்சைகள் சாதகமான முடிவைத் தரவாய்ப்பில்லை. குழந்தைப் பாக்கியமற்றவர் மேலும் கவலையடைவர். விவசாயிகளுக்கும், கலைஞர்களுக்கும் செயலுக்கு ஏற்ற வருவாய் கிடைக்காது சோதனையான ஆண்டு.

**- ஜோஸ்யர் அனுஷியா -**

## மகரம்

உத்தராடம் 2 ஆம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் வரையுள்ள நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் தங்கள் பெயரின் முதல் எழுத்தாக யோ, ஐ, ஜா, சி, சு, சே, சோ, கா, கி என்னும் எழுத்துக்களைக் கொண்டவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் பத்தாவது ராசியாக திகழ்வது மகரம். இந்தராசிக்கதிபதி. நவக்கிரகங்களில் பெரிய கிரகமான சனியாகும். மனித இனத்தின் வாக்கு தானம் குடும்பம், ஆயுள் மூச்சுக்காற்று ஆகிய அனைத்துக்குமே சனிபகவானே முக்கியமாகையால் சனிக்கிரகத்திற்கு மட்டுமே ஈஸ்வரப்பட்டமுண்டு. முப்பதாண்டு காலம் வாழ்ந்தவர்களுமில்லை, முப்பதாண்டு காலம் தாழ்ந்தவர்களுமில்லை என்பது சனீஸ்வரனின் சஞ்சாரத்தைக் கொண்டு எழுந்த பழமொழி மகரராசிக்காரர்கள் சனிபகவானின் ஆதிக்கம்பெற்றவர்கள். இவ்விராசியாளர் எதை பற்றியும் அழுத்தமாகவும், திட்டமாகவும், மிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும், அழகாகவும் பேசுவார்கள். வாக்குஸ்தானத்திற்கு அதிபதி சனியாகையால் வாக்கு வன்மையும் வளமையும் உள்ளவர்கள் இவர்கள். இனிமையாகப் பேசிப்பழகும் மனப்பக்குவமும் ஏற்றத்தாழ்வுகளைப் பாராட்டாமல் எவருடனும் சமமாகப் பழகும் குணப்பக்குவமும் உள்ளவர்கள். சிரித்தமுகம் எல்லோருக்கும் நன்மை செய்யவும், உபகாரசிந்தனை, உதவுங்குணம், கருணையுள்ளம், கலங்காதமனம், தளராத ஊக்கம், தியாகம் செய்யத் தயங்காத மனவலிமை ஆகிய அனைத்தையும் கொண்டவர்கள் மகரராசிக்காரர்கள். இவர்கள் எந்தநேரத்தில் எந்தச் செயலைச் செய்தாலும் அதன் விளைவு இப்படித்தான் இருக்குமென்று முன்கூட்டியே அறிந்துவிடவல்லவர்கள். எதையும் வீணாக்க விரும்பமாட்டார்கள். மகரராசிப் பெண்கள் எப்போதும் ஆண்களின் ஆண்மையை பெரிதும் ஏசித்து மகிழ்வார்கள். குடும்பப் பொறுப்புக்களை அலட்சியமாக நிர்வகிப்பவர்கள். தம் சொந்த விருப்பங்களுக்கமைவாக வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள் இவ் ராசிப் பெண்கள் பெற்றோர்களுக்கு பாசமிகு பெண்களாகவும்: கணவனுக்கு நல்ல மனைவியாகவும் திகழ்பவர்கள். இவர்கள் பாவபுண்ணியங்களில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தாலும் தாம்செய்வது பாவபுண்ணியமா என்பதை அறியாமலே இவர்கள் செயல்படுவார்கள். பிடித்துக்கொண்ட பிடியை அடித்தாலும் கடித்தாலும் விடமாட்டார்கள். தாங்கள் பருவவயதில் காதலை விளையாட்டாகக் கருதக்கூடியவர்கள் மகரராசியாளர்களே. இவர்கள் தொழில் துறை பங்காளராகவோ குடும்ப உறவை ஏற்படுத்தவோ இடபம் கடகம் துலாம் மகரம் மீனம் இராசியில் பிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்தால் அதிஸ்டமுண்டு. பூஜைக்குரிய தெய்வம் திரிமூர்த்தி அதிஸ்ட நிறம் யானைச்சாம்பல் அதிஸ்ட ரத்தினம் இந்திரநீலம் அதிஸ்டதிசை தென்கிழக்கு ஆடை கம்பளி அதிஸ்டமானது. இவ்ராசியாளருக்கு இவ்வாண்டு முக்கிய கிரகமான சனி வியாழன் ஐந்தாம் வீட்டில் சஞ்சாரம் செய்கின்றார். இராகு கேது சஞ்சார மாற்றங்களும் யோகமான பலனைத் தரும். இடபராசியில் அமரும் வியாழன் தொழில்ஸ்தானம், லயஸ்தானம் இராசியைப் பார்வை செய்வது நன்மையானது. தொழில்துறைகளில் முன்னேற்றமான காலம் உருவாகும். முதலீடுகள் லாபம் தரும். சொத்துவிவகாரங்களில் நல்ல முடிவுகள் வரும், குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நிகளும், குடும்ப உறவு தீவிரமாகும், புதிய காணி வீடு வாங்க வசதிகள் பெருகும், திருமணம் செய்யாதவர்கள் திருமண பாக்கியம் பெறுவர். மகளிருக்கு புதிய வாழ்வும் தொழில் சிறப்பும் கிட்டும், உறவினர் ஆதரவு கிட்டும், மணமுறிவுகள் அகல வாய்ப்புக் கிட்டும், மாணவர்கள் கல்வியில் உற்சாகம் காட்டுவர், பெறுபேறுகளும் சிறப்பாக அமையும், வெளிநாட்டுப்பயணங்கள் கைகூடும், பொருளாதார வளம் அதிகமாக இருக்கும், விவசாயிகள் அதிக ஆதாயம் அடைவர், கலைஞர்கள் அதிக மதிப்பைப் பெறுவர், புதிய ஆண்டு கவலை துய்க்கும் ஆண்டு.

[துலாம் விருச்சிக ராசிகளின் பலன் நாளை வரும்.]

---

## மிலேனியத்தை வேண்டி......

வருகின்ற மிலேனியத்தை வளர்யுகத்துச் சிற்பியாக
வந்துலகில் உலாவரவே வேண்டுகின்றேன்.
தருகின்ற சிற்பமெலாம் தரணியிலே சமநிலையைத்
தரவெனவே நெஞ்சார வேண்டுகின்றேன்.
ஒருபுறம் உயர்மலையும் ஒருபுறம் தாழ்நிலமும்
ஒழிந்தநல் கலைப்படைப்பை வேண்டுகின்றேன்.
கருநிறத் தொகுதிவெண்மைக் கவினுறு தொகுதியென்று
கணித்திடாத் தன்மைதன்னை வேண்டுகின்றேன்.

மனிதனை வடிக்கும்வேளை வாய்தன்னை மூடமாக்கி
மௌனமே மொழியாக்க வேண்டுகின்றேன்.
கனிவான இதயத்துள் காருண்யக் கலவைகொண்டு
களிப்புறப் படைத்திடவே வேண்டுகின்றேன்.
புனிதமாம் மொழிதன்னால் பூவுலகம் பிளவுண்டு
போரிடும் நிலையகற்ற வேண்டுகின்றேன்.
பனிபோலும் நிலையில்லாப் பணமென்னும் சிலைவடிக்கும்
பணிதன்னை ஒழித்திடவே வேண்டுகின்றேன்.

ஆலயமெங் கமைத்திடினும் அதற்கெலாம் கதவெதுவும்
அற்றநிலை அமைத்திடவே வேண்டுகின்றேன்
காலமெல்லாம் ஒருசிலர்க்காய்க் கதவடைக்கா நிலைதன்னைக்
கண்டுலகில் இன்புறவே வேண்டுகின்றேன்.
ஞாலமதற் கோரரசும் நலம்பேணி நமைக்காக்கும்
நாகரிகத் தலைமைச்சிலை வேண்டுகின்றேன்
கோலமுறும் உலகிலெங்கும் குண்டுகள் துளைத்திடாத
கோலவெழிற் சிலைதன்னை வேண்டுகின்றேன்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனுமாம்
உண்மைத்துவ உருவினையே வேண்டுகின்றேன்
என்றோ அழிந்தவெங்கள் அமைதியும் இன்பமெலாம்
எழுந்துமறு உருக்கொளவே வேண்டுகிறேன்
நன்றே எனநினைந்து நான்வேண்டும் இவ்வுருக்கள்
நன்றானால் திரும்பவும் வேண்டுகின்றேன்
அன்றேல் உன்வரவில் ஆருக்கிங் கேதுபயன்
அகிலத்துநீ வராதொழிய வேண்டுகின்றேன்.

வதிரி **மா. கிருஷ்ணகாந்தன்**

## புத்தாயிரமே நீ வருக!

புது நூற்றாண்டே புத்தாயிரமே நீ வருக'
இந்தப் பூமி எங்கும் அமைதி கொண்டே வருக,
நாம் பார்த்த ஆண்டுகள் எல்லாம் பாவிகள் ஆண்டே.
பரந்த பூமியிலே அமைதி இல்லையே,
பூத்துவரும் புத்தாண்டே, புது நூற்றாண்டே
நீ நிச்சயம் அமைதி தருவாய்.
பேதைகள் நாங்கள் காலம் மாறியது என்கிறோம்
ஆனால் காலமே நீ மாறவில்லை,
நாம் மாறி விட்டோம். உன்னையும் மாற்றி விட்டோம்
புவிமீது இனிஒரு நூற்றாண்டு இன்பமாய், மன இன்பமாய்
கனிய வேண்டும்.

அதற்கு காலமே நாம் உம்மை மாற்ற முதல்
நீ எம்மை மாற்று, காலமே நீ எம்மை மாற்று,
மாறாதவரை மாறுவது மாற்றம் ஒன்று தானே
மாற்றம் ஒரு நாளும் தான் மறாது?
மாற்றுபவரை மாற்றும், ஏமாற்றும்
முகம் பார்க்க நானும் முதல் காதலர் போல
புது நூற்றாண்டே, புத்தாயிரமே உம்மை நாம் பார்க்கிறோம்.
நாணங்கள் கோலம் போட நன்மையாய் முடியும்
என்று, உள் நிழலில் நிஜமாய் நாம் கால் பதிக்கிறோம்.
பாதை மாறிப் போகாமல் பாவிகள் எம்மை
பதப்படுத்தி இறை ஒளியிடம் சேர்ப்பாய்.

காரையம்பதி. **எஸ். கெங்கா**

---

## வடமராட்சி கிழக்கில் பொதுச் சந்தை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பொதுச் சந்தை புதிதாக கட்டப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் இச்சந்தையை மாமுனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வந்தது. தற்போது இச் சந்தையை பிரதேச சபை பொறுப்பெடுத்துள்ளது.

இரண்டாயிமாம் ஆண்டு இச்சந்தையை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசம் பிரதேச சபையின் கீழ் நடத்த உள்ளதாக சமாச தலைவர் மு. வி. தர்மகுலசிங்கம் தெரிவித்தார்.

முயற்சி திருவினையாக்கும் முயன்றின்மை
இன்மை புகுத்திவிடும்!

- குறள்

# வலம்புரி

## முயற்சி திருவினையில்

நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங் கெட்டார்
சிலர் அல்லும் பகலும்
வெறுங்கல்லாய்
இருந்துவிட்டு
அதிஷ்டம் இல்லை என்று
அலட்டிக் கொள்வார்.

மேலே தரப்பட்ட பாடலடிகள் நேரம் பொன்னானது; விலை போதாதது என்பதை அழுத்தந் திருத்தமாக வலியுறுத்துகின்றன. பருவத்தே பயிர் செய்யும் பக்குவத்தை மேலும் நினைவு படுத்துகின்றன வையத்தில் வாழ்வாங்கு வாழ்தலும் வையகம் பயனுற வாழ்தலும் இன்றியமையாத தொன்று என்பதையும் இடித்து உரைக்கின்றன.

இளைய சமுதாயம் நாளைய நாட்டின் முதுகெலும்பு வளங்காண வேண்டிய பொறுப்புடையது ஆதலால் இளைஞர்கள் யுவதிகளிடையே முளை கொள்ள வேண்டிய பெறுமதி மிக்கசெயற்பாடுகள் பலவுள. வாழ்வின் எக்கோணத்திலும் நன் முயற்சியைச் செயற்படுத்த விழைவோர் திட்டமிடல் ஒழுங்கமைப்பு, நிதானம், தன்னம்பீக்கை பொறுமை, விடா முயற்சி என்பனவற்றை பற்றிக்கொள்ள வேண்டும்.

மாணவப் பருவத்தினர் கூட மேலே குறித்த ஒழுங்கு முறையில் தம் கல்வியைத் தொடரின் பாரிய முன்னேற்றங்களை அடைவர் தனக்கும் தன் வீட்டிற்கும் பெருமையை அள்ளிக் குவிப்பர் சுமையிலா வாழ்வை நிர்மாணிப்பர் தொட்டனைத் தூறும் மணற் கேணிபோல்அறிவு கற்றனைத்துஊறக்கண்டு களி கொள்வர்.

இன்றைய இளைஞர் சமுதாயம் ஸ்த்திரமற்ற அரசியல், சமூக, பொருளாதார சூழல்களுக்குள் கால் பதித்து பாதை புரியாமலும், திசைகள் தெரியாமலும் தடுமாறுகிறார்கள். இருளில் இடை இடையே ஏற்படும் மின்னல் கீற்றின் ஒளியில் மட்டும் கிடைப்பவற்றை அனுபவிக்கும் பரிதாப நிலைக்கு உள்ளாகிறார்கள்.

வாழ்வின் குறிக்கோளைப்பற்றிக் கொள்ள வேண்டும். வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இளைய சமுதாயம் எழுச்சி கொள்ளட்டும்.

-அன்புடன் ஆசிரியர்

# அம்பாறையில் பரவும் காய்ச்சல்
# மருந்துகள்இன்றி நோயாளர் அவதி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் புதிதாக பரவிவருகின்ற காய்ச்சலினால் பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மழை காரணமாக தீவிரமாக பரவிவருகின்ற இக் காய்ச்சலுக்கு பலர்இலக்காகி வருவதாகவும், அம்பாறை மாவட்ட வைத்தியசாலைக்கு வருகைதருகின்ற வெளி நோயாளர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களே என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை—இக் காய்ச்சலைக் குணப்படுத்துவதற்கு தேவையான மருந்துகள் பெரும்பாலான வைத்தியசாலைகளில் இல்லாத காரணத்தால் தனியார் வர்த்தக நிறுவனங்களில் வாங்க வேண்டி இருப்பதாக பொதுமக்கள் மட்டத்தில் இருந்து தெரியவருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் நீண்டகாலமாகநுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் நெருப்புக் காய்ச்சல் நோயும் பரவிவருவதாக மேலும் தெரியவந்துள்ளது.

## சர்வதேச மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்றும் இலங்கை வீரர்கள்

(கொழும்பு)

கொங்கொங்கில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் இலங்கையின் வீரர்களும், வீராங்கனைகளும் பங்குபற்றவுள்ளதாக விளையாட்டுத்துறைஅதிகாரியொருவர்தெரிவித்துள்ளார்.

ஹொங்கொங் செல்லவுள்ள இந்த வீரர்கள் எதிர் காலத்தில் எமது நாட்டின் விளையாட்டுத்துறைக்கு மேலும் ஊக்கம் கொடுப்பார்கள் என்றும் இதன் மூலம் மேலும் பல புதிய வீரர்கள் விளையாட்டுத் துறையில் ஈடுபட வாய்ப்பாக இது இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

(க-14)

## பொது மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தையை சுற்றி முட்கம்பி அடைத்ததனால் சன நடமாட்டம் அதிகரிக்கும் சமயத்தில் மக்கள் பெரும் இன்னலை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப் படுகிறது.

இது விடயம் தொடர்பாக உறுதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சம்பந்தப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(க- 22)

## வாகனங்கள் செல்வதற்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருச்சந்தி சோதனைச் சாவடி ஊடாக பேருந்துகள், மற்றும் தனியார் போக்குவரத்து வாகனங்கள் யாழ் நகரில் இருந்து செல்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளது.

முன்னர் இப்பாதையூடாக யாழ் நகருக்குள் வருவதற்கு மட்டுமே இவ்வாகனங்களுக்கு அனுமதியளிக்கப் பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள் செல்வதற்கு மட்டும் அனுமதியளிக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது,

## தறிக்கப்படும் பனை மரங்கள்

(சாவகச்சேரி)

கைதடி - நுணாவில் பகுதியில் கண்டி வீதியில் பெருமளவு பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருவதாக பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதனால் பயன் தரு மரங்களை இழக்க வேண்டி உள்ளதாகவும், தமிழ் மக்களின் பொருளாதார வளத்தில் இது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-21)

## வாழைக்குட்டிகள் வெட்டப்பட்டன

(பருத்தித்துறை)

வாழைத் தோட்டத்தில் நடப்பட்டிருந்த சுமார் முந்நூறு வாழைக்குட்டிகள் விஷமிகளால் இரவோடு இரவாக வெட்டி எறியப்பட்டுள்ளது.

தம்பசிட்டி புலோலி மேற்கில் வசிக்கும் க. சிவநேசன் என்பவரது தோட்டத்தில் நடப்பட்டிருந்த வாழைகளே இவ்வாறு வெட்டிஎறியப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம்தொடர்பாக தோட்ட உரிமையாளரால்பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(செ-11)

# மூவாயிரம் ஆண்டளவில்உலகத்தில்
# மனித இனம் இருக்கப்போவதில்லை

### -பேராசிரியர் அயன் அன்ஜெல் கருத்து

(இலண்டன்)

ஒரு காலத்தில்மனித குலமே இந்தப் பூமியில் இருக்கப் போவதில்லை: மூவாயிரம் ஆண்டளவில்உலகில் எவருமே வாழமாட்டார்கள். இவ்வாறு கணித்துக் கூறியவர் லண்டன் ஸ்கூல் ஒப் எக்கனமிக்ஸ் பேராசிரியர் அயன் அன் ஜெல்

எதிர்காலம் குறித்து இப் பேராசிரியர் கணித்து, விரைவில் வெளியிடவிருக்கும் நூலிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார்.

இதற்குரிய காரணமாக, ஏற்கனவே உலகில் மக்கள் கூடுதலாக வாழ்வதும், தானியங்களை உணவாக உட்கொள்வதையும் கூறுகிறார். மேலும் இதுபற்றிக் கணித்துக் கூறுகையில்: 3000 ஆம் ஆண்டளவில் மிக அரிதாகவே மக்கள் வாழ்வார்கள்.

இதே வேளையில் எரி பொருளின் தற்போதைய நுகர்வு விகிதம் தொடருமானால் அக்கால கட்டத்தில் உலகத்தின் உஷ்ணம் இரண்டு மடங்கு ஆகி விடும் என்று பிரிட்டிஷ் [illegible] நிலையம் கூறுகிறது.

இந்த உஷ்ண நிலை தொடருமானால் உலகின் மேற்கு தென் துருவப் பகுதிகளில் பனிப்படலம் உருகும்.

இதனால் கடல் மட்டம் 5மீட்டருக்கு உயரும் இதன் மூலம் முழு உலக நாடுகளும் கடலில் மூழ்கும் என்று ஹட்லி நிலையத்தின் தலைவர். ஜியோப் ஜென்கின்ஸ் கூறியுள்ளார்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ரோமானியர்களின் மூளையைப் போலவே எமது மூளையும் உள்ளது.

ஆகவே 3000 ஆண்டளவில் மனிதர்கள் சிறிது உயரம் கூடியவர்களாக, அல்லது சிறிது மெலிந்தவர்களாக, அல்லது சிறிதுசதைப்பிடிப்புக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஆனால் அடிப்படையில் மாற்றம் இருக்காது என ஹமிஸ் மக்றே என்ற எழுத்தாளர் கூறியுள்ளார்.

அடுத்த 100 வருடங்களில் குறைந்த மொழிகள் பேசப் படும், நீர் குறைவாக இருக்கும், கனிவளம் பரவலாகக் குறைந்திருக்கும். கைக்கடிகார அளவில் ஒரு கருவி மூலம் மக்கள் தத்தம் உடல் ஆரோக்கிய நிலைகளைக் கவனித்துக் கொள்வார்கள் என்றும் கூறுகிறது அமெரிக்காவில் உள்ள உலக எதிர் காலச் சங்கம்.

## கிராமங்கள் அபிவிருத்தி

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பிரதேசசபைப் பகுதியின் கல்வி கலாச்சார நடவடிக்கைகளை மேம்படுத்து முகமாக சனசமூக நிலையங்களுக்கு இலவசமாக நூல்களை வழங்கியுள்ளது.

விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கமாக விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை இலவசமாக வழங்கியுள்ளது.

[க-52]

### கியூபா வான்பரப்பில்
## அத்துமீறி துண்டுப்பிரசுரம் வீசிய அமெ. விமானம் வெளியேற்றப்பட்டது

(வோஷிங்டன்)

கியூபாவின் வான்பரப்பில் பிடல் காஸ்ரோவிற்கு எதிராக துண்டுப் பிரசுரம் வீசிய சிறிய விமானத்தை தனது வான்பரப்பை விட்டு வெளியேற்றுவதில் கியூபா மேற்கொண்ட முயற்சியை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

அமெரிக்கா மாநிலமான புளோரிடாவிலிருந்து புறப்பட்ட இந்த சிறிய விமானம் கியூபாவின் தலைநகரான ஹவானாவில் மேற்படி துண்டுப்பிரசுரங்களை வீசிக் கொண்டிருந்த போதே இரு கியூப போர்விமானங்களால் நாட்டைவிட்டு பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டது.

பின்னர் அவ் விமானத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து தரையிறக்கிய அமெரிக்க அதிகாரிகள் அவ் விமானியை விசாரணைக்கு உட்படுத்திய போதிலும் குற்றச்சாட்டுகள் பதிவாகவில்லை.

சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னரும் இதேபோன்றதொரு செயலில் ஈடுபட்டிருந்த இரு சிறிய விமானங்கள் கியூபா படையினரால் சுட்டுவீழ்த்தப்பட்டதும் அதில் பயணம் செய்த நான்கு அமெரிக்கர்கள் கொல்லப் பட்டதும் தெரிந்ததே.

## இந்திய விமானத்தை கடத்தியவர்கள் பாகிஸ்தான் தீவிரவாதிகளே
### இந்தியா குற்றச் சாட்டு

(புதுடில்லி)

இந்திய எயர்லைன்ஸ் விமானத்தை கடத்திய 5 கடத்தல் காரர்களும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களே, என இந்தியா, பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டி உள்ளது.

பாகிஸ்தான் இதனை வன்மையாக மறுத்துள்ளதோடு விமானத்தை கடத்தியவர்கள் பாகிஸ்தான் வந்தால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனைகளுக்கு உள்ளாக்கப் படுவர் என உறுதியாக கூறி இருக்கிறது.

இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நிலவுகின்ற பனிப்போர் இச்சம்பவத்தால் மேலும் விரிசலடையலாம் என சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ரஷ்ய படைகளுக்கு எதிரான தாக்குதலில் செச்செனிய படையினர் தீவிர ஆர்வம்

(குறொஸ்னி)

செச்செனியாவிற்குள் நுழைந்துள்ள ரஷ்ய படைகளுக்கு எதிராக தமது படைகள் முழு அளவிலான ராணுவ நடவடிக்கையை தீவிரமாக மேற்கொண்டு வருவதாக செச்செனியாவின் ஜனாதிபதி மஸ்கடோல் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் செச்செனிய மக்களுக்கு ரஷ்ய படைகள் தொடர்ந்தும் தீங்கிழைக்குமேயானால் அவர்களை முற்றாக ஒழித்துக்கட்ட நாம் ஒரு போதும் பின்நிற்க மாட்டோம்.

சொந்த மக்களைப் படுகொலை செய்யும் குற்றத்திற்காக எந்த ஒரு அரசாங்கமும் தண்டனையிலிருந்து தப்பிக்கமுடியாது.

இதேவேளையில் ரஷ்ய படையினரின் தாக்குதலையடுத்து இவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருவதும் ஏற்கனவே தெரிந்ததே.

செச்செனியா மீதான தாக்குதலை ரஷ்யப் படைகள் தீவிரப்படுத்தியதையடுத்து எவ்வேளையிலும் குறோஸ்னி ரஷ்ய படைகள் வசம் வீழ்ந்துவிடக்கூடும் என்றும் சர்வதேச பாதுகாப்பு வல்லுநர்கள் கருத்து வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க- 14)

# தினேஷ்குணவர்த்தனாவுக்கு விரைவில் அமைச்சர் பதவி வழங்கப்படும்?

(கொழும்பு)

மக்கள் ஐக்கி முன்னணி [எம். ஈ. பி] தலைவர் தினேஷ் குணவர்த்தனாவுக்கு விரைவில் அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அடுத்த சில வாரங்களினுள் அமைச்சரவையில் பாரிய மாற்றங்கள மேற்கொள்ளப்படும் போது சில முக்கியஸ்தர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. இதன் மூலம் தற்போதிருக்கு அமைச்சர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பொஜ.ஐ.முவேட்பாளர் சந்திரிகாவிற்கு தினேஷ் குணவர்த்தனா பகிரங்கமாக ஆதரவு தெரிவித்திருந்ததுடன் அவரது வெற்றிக்காகவும் பெரிதும் பாடுபட்டிருந்தார்.

எதிர்வரும் சிங்கள, தமிழ் புது வருடத்திற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளதாக எதிர்பார்க்கப்படுவதால் அதற்கு முன்னர் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்து தேர்தலை எதிர்கொள்ள அரசு தயாராகி வருகிறது.

தினேஷ் குணவர்த்தனா இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தரும் கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் இந்திக குணவர்த்தனவின் சகோதருாமாவார்.

## புங்குடு தீவு கொலைச் சம்பவம்

# டக்ளஸ் தேவானந்தா கடற்படைத் தளபதி திசேரா சந்திப்பு

(கொழும்பு)

புங்குடுதீவு இளம் பெண் படுகொலை சம்மந்தமாக இதுவரை எதுவித முன்னேற்றமும் காணப்படாததினால் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடற்படைத் தளபதி திசேராவைச் சந்தித்து இது தொடர்பாக பேசவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்படு கொலைச் சத்பவம் தொடர்பாக தீவுப்பகுதி ஈ.பி.டி.பி.யினருக்கும் கடற்படையினருக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது,

## முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்

# ஏ. எஸ். ஜெயவர்த்தனாவுக்கு பிரதி நிதி அமைச்சர் பதவி வழங்கஏற்பாடு?

பிரதி நிதி அமைச்சராக ஏ. எஸ். ஜெயவர்த்தனா நியமிக்கப்படலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநரான இவர் வெளிநாடொன்றின் தூதுவராகக் கடமையாற்றிவருகிறார்.

தேசிய பட்டியல் எம்பியான திரு வை. பி. சில்வா காலமானதை அடுத்து அவரது இடத்திற்கு திரு ஜெயவர்த்தனா எம். பி யாக நியமிக்கப்படலாம் என்று தெரியவருகிறது.

தற்போது பிரதி நிதிஅமைச்சராக திரு ஜி. எல் பீரிஸ் கடமையாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது:

## நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில்

# நடுவு நிலைமை வகித்த அதிகாரிகளை அரசாங்கம் பழிவாங்குகின்றது!

## ஐ. தே. கட்சி செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது நடுநிலைமை வகித்த தேர்தல் உத்தியோகத்தர்களை அரசு பழி வாங்கி வருவதாக ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துகோரளை கண்டனம் தெரிவித்துள்ளார்.

இத்தகைய பழிவாங்கல் தொடர்பாக காமினி அத்துகோரளை மேலும் தெரிவிக்கையில்;

யாராவது அரசினால் பழிவாங்கப்பட்டிருந்தால் பாதிக்கப்பட்டவர்களை எமக்கு அறியத்தருமாறும், இதுவிடயத்தில் அவர்களுக்கு தேவையான சட்ட உதவிகளை ஐ. தே. கட்சி செய்யும் என்றும் இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களை ஐ. நே. கட்சியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

### தேர்தல்...

பயன்படுத்தி இதுவரை காலமும் இழுபறி நிலையில் இருந்து வரும் மகாண சபைத் தேர்தலை நடாத்தி நிர்வாகத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைப்பதன் மூலம் பிரச்சினைகளைக் குறைக்க முடியுமென நம்புகிறேன்.

இது குறித்த முடிவுகளை எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயத் தீர்மானித்துள்ளேன் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் குறித்து ஜனாதிபதியுடன் விரிவான சந்திப்பு ஒன்றினை நடாத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்·

### சமாதான. . .

றின் மத்தியஸ்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா காமன்வெல்த் செயலாளர் நாயகம் மற்றும் நோர்வே அரசுடனும் ஏற்கனவே தொடர்புகொண்டிருந்தார்.

இலங்கை வரவிருக்கும் நோர்வே வெளிநாட்டமைச்சர் இலங்கையில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கும் போது அரசாங்கக் கட்சியினரையும், எதிர்க்கட்சிகளையும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

1993ம் ஆண்டில் இஸ்ரேல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு இடையே காணப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமாதான உடன்படிக்கைக்கு வழி வகுத்த பல மாதகால இரகசியப் பேச்சுவார்த்தைகளின் மத்தியஸ்தராக நோர்வே செயற்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ். வழமைக்குத் திரும்பும் 'வரை தென்பகுதி மருத்துவர் வரத்தயக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் பதற்ற நிலை நீங்கும்வரை தென்பகுதி மருத்துவர்கள் எவரும் யாழ்ப்பாணத்திற்கு செல்லமாட்டார்கள் என மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இச்சங்கம் மேலும் தெரிவிக்கையில்: யாழ்ப்பாணத்தில் இருந்து தென்னிலங்கை சென்ற 45 மருத்துவர்கள் தங்களது பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணம் வழமை நிலைக்குத் திரும்பும் வரை தாம் அங்கு திரும்ப மறுப்பு தெரிவித்துள்ளனர் என்றும்.

யாழ்.பாதுகாப்பு நிலைமை வழமைக்கும் திரும்பும் வரை மேற்படி மருத்துவர்கள் வேறு மருத்துவமனைகளில் தற்காலிகமா கசேவையில் ஈடுபடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இவர்களில் 5 மருத்துவர்கள் சில நிபந்தனைகளின் பேரில் யாழ்ப்பாணம் சென்று கடமையாற்ற இணக்கம் தெரிவித்துள்ளதாகவும்,

அந்த நிபந்தனைகளாக தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும்போது உடன் கொழும்பு திரும்ப நடவடிக்கை எடுத்தல், 3 மாதத்திற்கு ஒரு தடவை கொழும்பு செல்ல விமான ரிக்கற் வழங்கல் போன்றவைகளே இந்நிபந்தனைகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இளவாலை மாரீசன் கூடலைச் சேர்ந்த இளைஞர் சைக்கிள் விபத்தில் பலி!

(டோகா)

டோகாவில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வாகன விபத்தில் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

விபத்தில் பலியான இளைஞன் மாரீசச கூடலைச் சேர்ந்த த. தவக்குமார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தவக்குமார் தான் வேலை பார்க்கும் வேலைத்தலத்திற்கு சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போதே இவருக்குப் பின்னால் வந்த வாகனம் இவருடன் மோதியதை அடுத்தே இவர் கொல்லப்பட்டார் என்று தெரிய வந்துள்ளது.

## குடும்ப கைகலப்பு மூவர் காயம்

நெடுந்தீவுப் பகுதியில் இடம்பெற்ற இரு குடும்பங்களுக்கு இடையிலான தகராறு கைகலப்பில் முடிவடைந்தது.

இச்சம்பவத்தின்போது 10ம் வட்டாரம் நெடுந்தீவைச் சேர்ந்த ச வரிமுத்து கொலஸ்ரிகா (வயது 60) என்பவரும் எட்டுப் பிள்ளைகளின் தாய் தந்தையரான அதே இடத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் விக்டோரியா அப்பர் (வயது 49) விக்டோறியா அப்பர் றெஜினா [வயது 45] ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ். பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (58 வ)

## அமைச்சர் பீரிஸ் லண்டன் பயணம்

கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பின்போது காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த நீதி அரசியலமைப்பு விவாகார அமைச்சர் ஜி, எல். பீரிஸ் மேலதிக சிகிச்சைகளுக்காக நேற்று பிரிட்டனுக்கு பயணமானார்.

அமைச்சர் பீரிஸ் பிரிட்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னர் களனிப் பல்கலைக்கழக சங்கைக்குரிய வேந்தர் வெலன் வித்தியாவே குலததேரோ தலைமையில் இவர் விரைவில் குணமடைய வேண்டி விசேட சமயநிகழ்ச்சி ஒன்றும் இடம்பெற்றது.

### ஜனாதிபதியின்...

முடியாது.

இனப்பிரச்சினை தொடர்பாக இரு பிரதான கட்சிகளும் கட்சி சார்பற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு மேற்குலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ள கருத்து வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

எனினும் ஜனாதிபதி தனது அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த அழைப்புத் தொடர்பாக உறுதியான ஆதரவு எதுவும் ஐ. தே. க மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை, தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று கருத்துக் கொண்டிருக்கும் ஐ. தே. க உறுப்பினர்கள் கூட தமது எண்ணத்தை கட்சிக்குள் வலியுறுத்தி அதனை முன்னெடுத்துச் செல்லுவதற்குரிய சக்தி இல்லாதவர்களாவே காணப்படுகின்றனர் என்றார்.

[க-14]

# நள்ளிரவு பயங்கரம் ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கொலை!

ஒருவீட்டிலுள்ள ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கோரமாக வெட்டிக்கொலை கொலைசெய்யப்பட்டதாகவும் ஒருவர் தூக்கில்போடப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இக்கோரச் சம்பவம் சியம்பலாண்டுவ என்னும் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு 2மணியளவில் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

இக்கொலைகள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள் இச்சம்பவம் தொடர்பாக எவரும் இது வரை கைது செய்யப்படவில்லை.

# தென்மராட்சிப் பகுதியில் ஷெல் வீச்சு 1600 குடும்பங்கள் இடம்பெயர்வு

தென்மராட்சிப் பகுதியின் தனங்கிளப்பு, மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தச்சன் தோப்பு, நாவற்குழி, கச்சாய் ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 1600 குடும்பங்கள் இடம்பெயர்ந்து கைதடி, மட்டுவில் பகுதிகளில் வாழ்ந்து வருகிறார். கள்,

இப்பகுதிகளில் இயங்கி வந்த சகல பாடசலைகளையும் சாவகச்சேரிப் பகுதி உள்ள பாடசலைகளில் தற்காலிகமாக இயங்க தென்மராட்சி கல்விப்பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதேவேளை குருநகர், பாசையூர், அரியாலைப்பகுதிகளில் தினமும் இரவு வேளைகளில் ஷெல் வந்து விழுந்து வெடிப்பதால் இப்பகுதி மக்கள் தம்முடைய சொந்த வீடுகளில் தங்காது ஈச்சமோட்டை, பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி, நரிக்குண்டு, கொன்வென்ட் ஆகிய இடங்களில் உள்ள தமது உறவினர்களினதும், நண்பர்களினதும் வீடுகளில் இரவைக்களித்து விட்டு காலையில் தம் சொந்த வீடுகளுக்குச் செல்வதைக் காண முடிகிறது.

கடந்த ஒருவரா காலமாக மணியம் தோட்டம், அரியாலை, ஏ. வி. றோட் வசந்தபுரம் ஆகிய இடங்ளில் 'ஷெல்'கள் வந்து வெடிப்பதனால் இப்பகுதியில் பதற்றம் நிலவுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## பதிவுசெய்யுமாறு கோரிக்கை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் இணைந்து வலி, கிழக்குப் பிரதேச எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையே ஒருங்கிணைந்த விளையாட்டுப் போட்டியினை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும விளையாட்டுக் கழகங்கள் வலிகிழக்கு பிரதேசசபையின் தலைமைக் காரியாலமத்தில் பதிவுகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அதன் தலைவர் பூ, குணசிங்கம் கேட்டுள்ளார். (ந)

## அதிகாரி விஜயம்

(ஆனைப்பந்தி)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகநரியும் சட்டத்தரணியுமான ந. ஜீவேஸ்வரா நாளை புதன் காங்கேசன் தடுப்பு முகாமிற்கு சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை பார்வையிட்டுள்ளனர்,

காங்கேசன் தடுப்பு முகாமிலுள்ள இளைஞர்களின் உறவினர்கள் இளைஞர்களுக்கென கடிதம், உணவு, உடுப்பு என்பன கொடுக்க விரும்பின் அலுவலக நேரத்தில் ஒப்படைப்பின் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த29)

## ரஷ்யாவிலிருந்து

# செச்சினியா செல்லமுற்பட்ட 33 இலங்கையர் கைது

[ரஷ்யா]

ரஷ்யாவிலிருந்து செச்சினியா செல்ல முயன்ற முப்பத்தெட்டு இலங்கையரை ரஸ்யாவின் அஸ்டவான் விமான நிலையத்தில் வைத்து ரஷ்ய அதிகாரிகள் கைது செய்தனர்.

சட்டவிரோத கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தமையாலே இவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டில் இருந்து ரஷ்யா சென்ற இவர்கள் அங்கிருந்து செச்சினியா செல்ல இருந்த போதே கைது செய்யப்பட்டனர்.